துருசவிய நிதியம் - 2022

--------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

துருசவிய நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2000 இன் 23 ஆம் இலக்க துருசவிய நிதிய சட்டம், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம்

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

  - நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

  - நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

  - நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

  - நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் நிதியத்திற்கு நன்கொடையாக பெருந்தோட்ட அமைச்சிடமிருந்து பெறப்பட்ட 89 அலகு மர தளபாட உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தின் ஆய்வுப் பதிவேட்டில் குறிப்புக்கள் பேணப்பட்டு வருகின்றன, மேலும் இந்த பொருட்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடையாக பெறப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் கம்பஹா ஆகிய 04 மாவட்டங்களில் உள்ள 31 துருசவிய சங்கங்களுக்கு | இது தொடர்பாக நான்கு முறை கோரிக்கை கடிதங்கள் மற்றும் சட்ட நோட்டீஸ் வழங்கப்பட்டிருந்ததுடன் பெரும்பாண்மையான தொகையை அறவிட முடிந்த போதிலும், இதுவரை | முற்பணங்கள் மற்றும் கடன்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| துருசவிய நிதியத்தினால் வழங்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் கடன்களிலிருந்து 05 வருடங்களுக்கு மேலாக ரூபா 826,109 மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | மிகுதித் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இது தொடர்பாக மீண்டும் முயற்சிப்பதற்கு அல்லது அறவிடமுடியாக் கடன்களாக பதிவழிப்பதற்கு முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 9.1 ஆம் பந்தி | கொடுக்கப்பட்ட பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் உப கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 174,530 பெறுமதியான 12 உப கட்டுநிதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு 14 முதல் 271 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | 2022.12.31 இற்குள் அனைத்து இடைக்கால முற்பணங்களும் திருப்பிச் செலுத்தப்பட்டு கணக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இதுபோன்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தி | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 06 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு வருடத்திற்கு முன்னர் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டது. எதிர்காலத்தில் 6 மாதங்களுக்கு ஒருமுறை எரிபொருள் நுகர்வை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் இல. 1645(அ) | ஒவ்வொரு வாகனத்திற்கும் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் ஒழுங்காகவும் முறையாகவும் பேணப்பட வேண்டிய போதிலும் நிதியத்தினால் பயன்படுத்தப்படும் மூன்று வாகனங்கள் தொடர்பாக சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், பேணப்பட்டு வந்த சம்பவக்குறிப்பு புத்தகங்களில், வாகனங்களின் விபரங்கள், எரிபொருள் நுகர்வு, திருத்தங்களின் விபரங்கள் முறையாக பதிவு செய்து பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது இயங்கும் நிலையில் உள்ள வாகனங்களுக்கு மாத்திரம் சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டு, சம்பவக்குறிப்பு புத்தகங்களில் உள்ள குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நி.பி. ஏற்பாடுகளின் பிரகாரம் வாகன சம்பவக்குறிப்பு புத்தகங்கள் பேணப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,978,820 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 3,543,063 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 7,521,883 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. திறைசேரி மற்றும் ஏனைய மானியங்கள் ரூபா 34,245,166 ஆல் குறைவடைந்தமை மற்றும் சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் ரூபா 4,943,207 ஆல் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில், நடைமுறை சொத்து விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் என்பன 14:1 மற்றும் 13:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் விகிதங்கள் முறையே 27:1 மற்றும் 26:1 ஆக இருந்தன. 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பயனுள்ள நீண்டகால முதலீட்டில் நிதிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, ரூபா 22,340,522 மற்றும் ரூபா 21,865,251 ஐ காசு மற்றும் காசுக்குச் சமமானவையாகப் பேணுவதன் மூலம், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் விரைவுச் சொத்து விகிதங்கள் பெரிய அளவிலான பெறுமதிகளை எடுக்கப்பட்டிருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | துருசவிய நிதியத்தின் கீழ், 13 மாவட்டங்களில் 818 துருசவிய சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன, ஆனால் மீளாய்வாண்டின் இறுதியில் 293 | கடந்த சில ஆண்டுகளாக, சில பகுதிகளில் இறப்பர் பயிர்செய்கையை அகற்றி, ஏனைய பயிர்களுக்கு திரும்புவது, நகரமயமாக்கல் | செயற்பாடற்ற சங்கங்களை செயற்படுத்தி நிதியத்தின் செயற்பாட்டை |

| | | | |
|---|---|---|---|
| | சங்கங்கள் செயற்பாடற்றிருந்தன. | காரணமாக இறப்பர் நிலங்கள் அகற்றப்பட்டமை போன்ற காரணங்களால், குறிப்பிட்ட சங்கங்களில் உறுப்பினர் எண்ணிக்கை குறைவதால், பிரச்சனைகள் எழுந்துள்ளன. ஆனால் எதிர்காலத்தில் தற்போதுள்ள சங்கங்கள் மறுசீரமைக்கப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில், சனாதிபதி செயலகத்திடமிருந்து நிதியத்தால் பெறப்பட்ட ஜீப் 2021 நவம்பரில் பழுதுபார்ப்புக்களிற்காக கராஜ்ஜில் ஒப்படைக்கப்பட்டது, ஆனால் அது 2023 மே வரை பழுதுபார்ப்புக்கள் பூர்த்தியடைந்த பின்னர் அலுவலகத்திற்கு கொண்டு வரப்படவில்லை. | பழுதுபார்ப்பு பணிகள் பூர்த்தியடைந்திருந்த போதிலும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாததால் மாத்தறை கராஜ்ஜில் கார் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், காரை நிறுவனத்திற்கு விரைவில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனம் உடனடியாக திரும்ப கொண்டுவரப்பட வேண்டும். |
| (இ) | 2020 சனவரி 05 இல் சனாதிபதி செயலகத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட கார், கொண்டுவரப்பட்ட நாள் முதல் இயங்கும் நிலையில் காணப்படவில்லை, மேலும் வாகனத்தை திருத்துவதற்கு போதிய பணம் ஒதுக்கப்படாததால், துருசவிய நிதிய வளாகத்தில் மூன்று வருடங்களுக்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டது. | வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு போதிய பணம் ஒதுக்கப்படாததால், இதனை பழுதுபார்க்க முடியவில்லை. | வாகனம் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில், ரூபா 3,000,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியில் அதிக உற்பத்தி மற்றும் வினைத்திறன் மிக்க 20 புகைக்கூடங்களை நிர்மாணிப்பதற்கு இலக்கிடப்பட்டது, ஆனால் ஆண்டின் இறுதியளவில் துருசவிய சங்கங்களால் 12 புகைக்கூடங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. | நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காததால், அனைத்து நவீன புகைக்கூடங்களினதும் நிர்மாணத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. மேலும், 2022 ஆம் ஆண்டில், நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி இந்த செயற்திட்டத்தின் முன்னேற்றத்தில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. எனினும், அனைத்து சவால்களையும் மீறி, 12 நவீன புகைக்கூடங்களின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. | மீதமுள்ள 8 திட்டமிடப்பட்ட புகைக் கூடங்கள் உடனடியாக நிர்மாணிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2021 ஆம் ஆண்டில் துருசவிய சங்க உறுப்பினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் பகிர்ந்தளிப்பதற்கு 4000 பால் வெட்டும் கத்திகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் போது துருசவிய சங்கங்களுக்கு 1,740 கத்திகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 150 கத்திகள் வழங்கப்பட்ட பின்னர், இருப்பு புத்தகத்தின் பிரகாரம் 2023 பெப்ரவரி 01 இல் உள்ளவாறு பால் வெட்டும் கத்திகளின் மீதி 2,110 ஆகும். அத் திகதியில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வின் போது ரூபா 1,680,705 பெறுமதியான 1,989 பால் வெட்டும் கத்திகள் மாத்திரமே எஞ்சியிருந்தன. அந்த அளவு பால் வெட்டும் கத்திகளும் மேல் தளத்தின் வெளிப்புறப் பகுதியில் துருப்பிடித்து சிதைந்து காணப்பட்டன, மேலும் இருப்புப் பாதுகாப்பு தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பில் சேர்க்கப்படாத 121 பால் வெட்டும் கத்திகளின் வழங்கல் தொடர்பான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 பெப்ரவரி 01 அளவில் கொள்வனவு செய்யப்பட்ட பால் வெட்டும் கத்திகளில் சங்கங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 1898 பால் வெட்டும் கத்திகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக பரீட்சிப்பின் போது இருப்பு புத்தகத்தில் வழங்கல் குறைவாகப் பதிவு செய்யப்பட்டதால் சரியான மீதியை கண்டறிய முடியவில்லை. அதன் பின்னர் அதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. தற்போது, இருப்பை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பால் வெட்டும் கத்திகள் தொடர்பாக சோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். களஞ்சியங்களில் கிடைக்கும் பால் கத்திகள் சங்கங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். |